**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

தேதி 25.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன் மறைவு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து நிலவரங்களை நேரில் ஆய்வு செய்வதற்காக இன்று ஜம்மு-காஷ்மீர் சென்றுள்ளார்.

நாளைய தலைவர்களாக இளைஞர்கள் மேம்பட, பல வாய்ப்புகளை இந்தியா வழங்குவதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து கடலோர கிராமங்களிலும், மீன்பிடி படகுகளை கணக்கெடுக்கும் பணிகள், வரும் 29ஆம் தேதி செவ்வாய்க் கிழமை நடைபெற உள்ளன.

-----------------------------

*கஸ்தூரி ரங்கன் 1* (17)

கல்வி மற்றும் அறிவியல் துறையில், இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தில் முக்கிய ஜாம்பாவானாக திகழ்ந்த, டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன் மறைவு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். அன்னாரின் தொலைநோக்குத் தலைமையும்,

நாட்டிற்கான சுயநலமற்ற பங்களிப்புகளும், எந்நாளும் நினைவில் கொள்ளப்படும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த போது, நாட்டின் விண்வெளித் திட்டத்தை புதிய உயரங்களுக்கு இட்டுச் சென்றவர் டாக்டர் கஸ்தூரி ரங்கன் என்றும், தேசிய கல்விக்

கொள்கை உருவாக்கத்தில், அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நாடு நன்றிக் கடன் பட்டுள்ளதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார். புதுமையாக்கப் பணிகளில் முக்கிய கவனம் செலுத்தி வந்த டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன், இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பலருக்கு, ஆசானாக திகழ்ந்தவர் என்பதையும், பிரதமர் சுட்டிக் காட்டி உள்ளார்.

முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன், பெங்களூரில் உள்ள அவரது இல்லத்தில், இன்று காலை காலமானார். அவருக்கு வயது 84. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வேந்தர்,

*கஸ்தூரி ரங்கன் 2* (5)

பெங்களூரில் உள்ள நவீன ஆய்வுகளுக்கான தேசிய கழகத்தின் இயக்குநர், மற்றும், மாநிலங்களவை உறுப்பினராகவும், அவர் பதவி வகித்துள்ளார். விண்வெளி விஞ்ஞானி டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன் உடலுக்கு, அவரது இல்லத்தில் வைத்து அஞ்சலி செலுத்த, வரும் ஞாயிற்றுக் கிழமை காலை, பொது மக்களை அனுமதிக்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

-----------------------------

*அமித் ஷா* (10)

பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களின் விசா அனுமதி நேற்று ரத்து செய்யப்பட்ட நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, அனைத்து மாநில முதலமைச்சர்களையும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அந்தந்த மாநிலங்களில் உள்ள பாகிஸ்தானிய பிரஜைகளை இனம் கண்டு வெளியேற்ற, உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். பாகிஸ்தான் உடனான சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது குறித்தும், மத்திய உள்துறை அமைச்சர் இன்று மாலை, கூட்டம் ஒன்றை நடத்துகிறார். ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல், மற்றும், மூத்த அதிகாரிகள், இதில் பங்கேற்கிறார்கள்.

-----------------------------

*ராணுவ தளபதி* (6)

இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, ஜம்மு-காஷ்மீர் நிலவரங்களை நேரில் ஆய்வு செய்வதற்காக இன்று ஸ்ரீநகர் சென்றுள்ளார். ஸ்ரீநகர் ராஜ்பவனில் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா நடத்திய பாதுகாப்பு மறு ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், அவர், பகல்காம் பகுதிக்கு புறப்பட்டு சென்றார்.

-----------------------------

*ராகுல் காந்தி* (6)

இதற்கிடையே, மக்களவை எதிர்க் கட்சித் தலைவரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான திரு. ராகுல் காந்தி இன்று ஸ்ரீநகரில், துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோரை சந்தித்து, தீவிரவாத கட்டமைப்பைக் குலைக்கும் முயற்சிகளுக்கும், பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு அறிவித்துள்ள நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்தார்.

-----------------------------

*தன்கர் தமிழ்நாடு* 1 (9)

பொருளாதாரம் மற்றும் உள்கட்டமைப்பில் வலுவான வளர்ச்சியுடன், உலக அளவில் அந்தஸ்தில் உயர்ந்து வரும் இந்தியா, நாளைய தலைவர்களாக மேம்படும் வாய்ப்பை, இன்றைய இளைஞர்களுக்கு வாரி வழங்குவதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார். இன்று, உதகமண்டலம் ராஜ்பவனில், 2 நாள் துணைவேந்தர்கள் மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், முன்னேறிய நாடாக மேம்படுவதற்கான இந்தியாவின் பயணத்தில், அறிவியல் ஆராய்ச்சித் திறன்களே, நமது முக்கிய வலுவாக திகழும் என்றார். குடியரசுத் துணைத் தலைவரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*தன்கர் தமிழ்நாடு* 2 (15)

**<u>(வாய்ஸ்)</u>**

கார்ப்ரேட் நிறுவனங்கள், மற்றும், இதர தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு தாராளமாக நிதி வழங்கி, இளைஞர்களின் புதுமையாக்கத் திறன்களை ஊக்குவிக்க வேண்டும் என, குடியரசுத் துணைத் தலைவர் கேட்டுக் கொண்டார். இந்திய மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், இந்தியாவிற்கு மட்டுமின்றி உலகிற்கே உதவக் கூடியதாகவும், ஒட்டுமொத்த உலகின் கவனத்தை ஈர்ப்பதாகவும் அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார். பல்கலைக் கழகங்கள், கல்வியுடன், ஆராய்ச்சிப் பணிகளை மறு ஒருங்கிணைப்பு செய்து கொண்டு, இளைஞர்களின் உள்ளாற்றலை வெளிக் கொணர வேண்டும் என்றும், பேராசிரியர்களின் அறிவுத் திறன்களை தங்களுக்கு இடையில் பகிர்ந்து கொண்டு, உயர்கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா, அனைவருக்கும் வளர்ச்சி-அனைவருக்கும் அமைதி என்ற கொள்கையுடன் கூடிய, உலக சக்தியாக மேம்பட்டு வருவதாக, குடியரசுத் துணைத் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

*தன்கர் தமிழ்நாடு* 3 (9)

முன்னதாக தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி, துணைவேந்தர்கள் மாநாட்டின் தொடக்க விழாவில் பேசுகையில், தமிழக அரசு, மாநில பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை இம்மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்கவில்லை என குற்றம் சாட்டினார். தமிழகத்தில் ஆராய்ச்சி படிப்பு முடித்தவர்கள் கூட, சாதாரண வேலையில்தான் இருப்பதாகவும், மாநிலத்தின் கல்வி நிலவரம், முன்னேற்றங்களுக்கு உகந்ததாக இல்லை என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, தமிழக ஆளுநரால் துணை வேந்தர்கள் மாநாடு கூட்டப் பட்டதை ஆட்சேபித்து, இன்று சென்னை, கோவை, ஊட்டி உள்ளிட்ட இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

-----------------------------

*மீனவர் கணக்கெடுப்பு* (12)

மத்திய அரசு உத்தரவின்படி, புதுச்சேரியில் உள்ள அனைத்து கடலோர கிராமங்களிலும், மீன்பிடி படகுகளை கணக்கெடுக்கும் பணிகள்,

வரும் 29ஆம் தேதி செவ்வாய்க் கிழமை நடைபெற உள்ளன. இயந்திரம் பொருத்திய மற்றும் இயந்திரம் இல்லாத ஃபைபர் படகு உரிமையாளர்கள், பதிவுச் சான்றிதழ், மற்றும் மீன்பிடி உரிமத்தை, இக்கணக்கெடுப்பின் போது, அலுவலர்களிடம் காட்ட வேண்டும் என்றும், பதிவு செய்யப்படாத படகுகள் ஏதேனும் இருந்தால், அவற்றுக்கான ஆவணங்கள் காட்டப்பட வேண்டும் என்றும் மீன்வளத் துறை அறிவுறுத்தி உள்ளது. கள ஆய்வின் போது, படகுகளை அதிகாரிகளிடம் காட்டுவது உரிமையாளர்களின் பொறுப்பாகும் என்றும், அவ்வாறு காட்டப்படாத படகுகள் மீது, தனியாக விசாரணை மேற்கொண்டு, பதிவை தொடரவோ, அல்லது நீக்கவோ முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

போட்டித் தேர்வு (9)

புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையில், முதல் நிலை உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு, யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், வரும் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது. மொத்தம் 32 ஆயிரத்து 829 பேர், இத்தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளனர். தேர்வர்கள், தங்களுக்கான தேர்வுக் கூட நுழைவுச் சீட்டை, புதுச்சேரி அரசின் ஆள் சேர்ப்பு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொண்டு, தேர்வுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும் என்றும், கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

-----------------------------

இலவச வாகனம் (5)

புதுச்சேரியில் சமூக நலத் துறை சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மங்கலம் தொகுதியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் மூவருக்கு, மோட்டார் பொருத்திய இலவச 3 சக்கர வாகனங்களை, சமூக நலத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் வழங்கினார். சமூக நலத் துறை இணை இயக்குநர் திரு. ஆறுமுகம் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கெண்டனர்.

-----------------------------

*ஊட்டச் சத்து* (7)

இம்மாதம் 8 முதல், 22ஆம் தேதி வரை நடைபெற்ற, தேசிய ஊட்டச் சத்து இருவார விழாவின் போது, ஊட்டச் சத்து குறைபாட்டினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தவிர்ப்பது குறித்து, புதுச்சேரியில், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் சார்பில், விழிப்புணர்வு கண்காட்சி, மருத்துவ முகாம் உட்பட, பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதுகுறித்து ICDS நோடல் அதிகாரி திருமதி நிர்மலா தேவி, எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் இருந்து, ஒருபகுதி.....

**(வாய்ஸ்)**

-----------------------------

*ஏனாம்* (10)

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் இன்று, ஏனாமில் உள்ள பிளம்ஸ்ரீ ராஜீவ் காந்தி அரசு உயர்நிலைப் பள்ளியிலும், நவோதயா பள்ளியிலும், நேரடி ஆய்வு மேற்கொண்டார். மண்டல கல்வித் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர். முன்னதாக, ஏனாம் துணை மின் நிலைய வளாகத்தில், வள மீட்புப் பூங்கா அமைய உள்ள இடத்தை நேரில் பார்வையிட்டு, அங்கு குப்பைகளை கொட்ட நகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதை தொடர்ந்து, வள மீட்பு பூங்கா அமைய உள்ள இடத்தில், குப்பைகளை கொட்டும் பணிகள் இன்று முதல் தொடங்கி இருப்பதாகவும், அதை ஆட்சேபித்து, ஆர்பாட்டத்தில் ஈடுபட முயன்ற நால்வரை போலீசார் கைது செய்து இருப்பதாகவும், நமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

-----------------------------

*ஐபிஎல்* (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை-ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. பெங்களூரில், நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், பெங்களூர் அணி, 11 ரன் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

-----------------------------

*வானிலை* (13)

தமிழகம் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வரும் 29ஆம் தேதி வரை, அதிகபட்ச வெப்பநிலையில், பெரிய மாற்றங்களுக்கான வாய்ப்பு குறைவுதான் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆயினும், ஒருசில இடங்களில், வெப்பநிலை இயல்பை விட, 2 முதல், 3 டிகிரி செல்சியஸ் வரை, அதிகமாக பதிவாகலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்னியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில், மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-----------------------------

*குவாண்டம் கணிப்பொறி* (15)

மனிதகுலத்தின் தீர்க்க முடியாத பிரச்சனைகளுக்கும், பல தீர்வுகளை வழங்கும் வாய்ப்பு அதிகம் உள்ள துறை, **குவாண்டம் கணிப்பொறியியல்** துறை என்று, மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், 3ஆவது சர்வதேச **குவாண்டம் தொலைத் தொட** ர்பு மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய அவர், குவாண்டம் அறிவியல் துறையினால், அறிவியல் கண்டுபிடிப்புகளின் வேகமும், புதுமையாக்க திறன்களும், பலமடங்கு அதிகரிக்கும் என்றார். குவாண்டம் ஆராய்ச்சிகள் மூலம், தேசியப் பாதுகாப்பு உட்பட எல்லாத் துறைகளிலும், முக்கிய மாற்றங்களை கொண்டுவர முடியும் என்பதை கருத்தில் கொண்டே, **தேசிய குவாண்டம் இயக்கத்தை**, மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும், நவீன அறிவியல் துறைகளில், இந்தியா, தனது தலைமைத் துவத்தை, ஜி-20 போன்ற பன்னாட்டு அரங்குகளில் ஏற்கனவே வெளிப்படுத்தி இருப்பதாகவும், அமைச்சர் கூறினார். நடப்பாண்டை, குவாண்டம் தொழில்நுட்ப ஆண்டாக, ஐநா மன்றம் அறிவித்து இருப்பதையும், அவர் சுட்டிக் காட்டினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன் மறைவு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து நிலவரங்களை நேரில் ஆய்வு செய்வதற்காக இன்று ஜம்மு-காஷ்மீர் சென்றுள்ளார்.

நாளைய தலைவர்களாக இளைஞர்கள் மேம்பட, பல வாய்ப்புகளை இந்தியா வழங்குவதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து கடலோர கிராமங்களிலும், மீன்பிடி படகுகளை கணக்கெடுக்கும் பணிகள், வரும் 29ஆம் தேதி செவ்வாய்க் கிழமை நடைபெற உள்ளன.